730

Approved by the Director of Public Instruction

NEW CENTURY TAMIL STORY READER

FIRST READER

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

730
1.21

BY

T. A. RAJARUTHNAM PILLAI



MADRAS

ERATURE SOCIETY FOR INDIA
d Calcutta Rangoon Colombo

73
03'16 5
N21
17114

விலை, 3 அணா

730
1·2
17 FEB 1921
MADRAS

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

NEW CENTURY TAMIL STORY READER

FIRST READER

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

BY

T. A. RAJARUTHNAM PILLAY

REGISTRAR OF
FEB 1921
MADRAS.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA


MADRAS ALLAHABAD CALCUTTA RANGOON COLOMBO

1921

முகவுரை

தமிழ் கற்கும் மாணாக்கர் அப்பாஷையை விரும்பிக் கற்று மிகவும் விருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு இத் தொடர்ப் புஸ்தகங்களே நவீனமாய் இயற்றி வெளியிட்டிருக்கின் றோம். இவற்றிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் கதைகளாயிருப்ப தால் இத்தொடர்ப் புஸ்தகங்களுக்குக் கதா வாசக புஸ்தகத் தொடர் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இவை முற்றிலும் புதிய முறையாய் எழுதப்பட்டவை. இவற்றில் பெரும்பாலும் மாணாக்கர் மனதை வசீகரித்து நல்லறிவுறுத்தும் நீதிக்கதைகளும், சிற்சில பொருட்பாடங்களும், அவர்கள் சுலபமாயும் உல்லாசமாயும் பாடக்கூடிய இசைப்பாட்டுக்களும், இத்தேசத்துச் சிறுவர் சிறுமிகள் சாதாரணமாய் வீடுகளில் பாடி ஆடும் போஷணசாலைப் பாடல்கள் (Nursery Rhymes) என்று சொல்லப்படுகிற விநோத பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாட புஸ்தகங்களில், ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய நீதிநூல்களிலுள்ள பாடல்களே உபயோகிப்பதே பெரு வழக்காயினும் நாம் அம்முறையைப் பெரிதும் கைக்கொள்ளாது இயன்றமட்டும் நீதிக்கதைகளேப் பாடல்களாக அமைத்துள்ளேம். ஆயினும் நம் தமிழ்நாட்டில் மேற்கூறிய ஔவை பாடல் முதலிய நூல்கள் மிகவும் சிரேஷ்டமாக எண்ணப்படுதலானும், அவை சிறந்த நீதியைப் புகட்டுதலானும் அவ்வழக்கத்தை முற்றிலும் நீக்காது மாணாக்கர் சக்திக்கேற்றபடி அவற்றிலிருந்தும் சில பாடல்களேச் சேர்த்துள்ளேம்.

ராஜ விசுவாசம் நம்மனேரிடத்தில் இருக்கவேண்டிய விசேஷ லக்ஷணம். அது வளருவதற்கேற்ற விதையைப் பாலியர் மனதில் விதைத்தால்தான் தக்க காலத்தில் பயன் தருமெனக் கருதி, ராஜ விசு வாசத்தை யுண்டாக்கத்தக்க சில கதைகளேயும் ராஜ வாழ்த்துப் பாடல் களேயும் இடையிடையே அமைத்திருக்கின்றோம். இவற்றால் ராஜ விசுவாசம் பாலியர் மனதில் உற்பத்தியாகுமென்பதே எம் துணிபு.



C. L. S. PRESS, MADRAS—1921

முகவுரை

தமிழ் கற்கும் மாணாக்கர் அப்பாஷையை விரும்பிக் கற்று மிகவும் விருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு இத் தொடர்ப் புஸ்தகங்களை நவீனமாய் இயற்றி வெளியிட்டிருக்கின் றோம். இவற்றிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் கதைகளாயிருப்ப தால் இத்தொடர்ப் புஸ்தகங்களுக்குக் கதா வாசக புஸ்தகத் தொடர் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இவை முற்றிலும் புதிய முறையாய் எழுதப்பட்டவை. இவற்றில் பெரும்பாலும் மாணாக்கர் மனதை வசீகரித்து நல்லறிவுறுத்தும் நீதிக்கதைகளும், சிற்சில பொருட்பாடங்களும், அவர்கள் சுலபமாயும் உல்லாசமாயும் பாடக்கூடிய இசைப்பாட்டுக்களும், இத்தேசத்துச் சிறுவர் சிறுமிகள் சாதாரணமாய் வீடுகளில் பாடி ஆடும் போஷணசாலைப் பாடல்கள் (Nursery Rhymes) என்று சொல்லப்படுகிற விநோத பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாட புஸ்தகங்களில், ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய நீதிநூல்களிலுள்ள பாடல்களை உபயோகிப்பதே பெரு வழக்காயினும் நாம் அம்முறையைப் பெரிதும் கைக்கொள்ளாது இயன்றமட்டும் நீதிக்கதைகளைப் பாடல்களாக அமைத்துள்ளேம். ஆயினும் நம் தமிழ்நாட்டில் மேற்கூறிய ஔவை பாடல் முதலிய நூல்கள் மிகவும் சிரேஷ்டமாக எண்ணப்படுதலானும், அவை சிறந்த நீதியைப் புகட்டுதலானும் அவ்வழக்கத்தை முற்றிலும் நீக்காது மாணாக்கர் சக்திக்கேற்றபடி அவற்றிலிருந்தும் சில பாடல்களைச் சேர்த்துள்ளேம்.


ராஜ விசுவாசம் நம்மனோரிடத்தில் இருக்கவேண்டிய விசேஷ லக்ஷணம். அது வளருவதற்கேற்ற விதையைப் பாலியர் மனதில் விதைத்தால்தான் தக்க காலத்தில் பயன் தருமெனக் கருதி, ராஜ விசு வாசத்தை யுண்டாக்கத்தக்க சில கதைகளையும் ராஜ வாழ்த்துப் பாடல் களையும் இடையிடையே அமைத்திருக்கின்றோம். இவற்றால் ராஜ விசுவாசம் பாலியர் மனதில் உற்பத்தியாகுமென்பதே எம் துணிபு.

ஏறக்குறைய இத்தொடர்ப் புஸ்தகங்களில் காணப்படும் படங்கள் யாவும் இவைக்கென்றே புதிதாகச் செய்யப்பட்டவை. சில பாடங்களுக்கு இரண்டு படங்கள் அமைத்துள்ளோம். ஆகையால் உபாத்தியாயர் ஒரு பாடத்தை ஆரம்பிக்க முன்னரே பிள்ளைகள் படத்தைப் பார்க்கும்படி செய்து கேள்விகளின்மூலமாய்ப் பாடத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகள் தம் வாயால் சொல்லும்படி செய்தல்வேண்டும் பிறகு பாடத்தை விபரமாய் உபாத்தியாயர் விளக்கிக் காட்டலாம். பாடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறந்த நீதியைக் கற்பிப்பதால் இத்தொடர்ப் புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் நீதி கதா சங்கிரகம் என்றலும் பொருந்தும். பெரியோரைப் பேணுதல், பெற்றோரைக் கனம்பண்ணுதல், பொய்யாமை, இன்சொல் மொழிதல், தீமை செய்யாமை, அன்புடைமை, ஜீவகாருண்யம், ராஜபக்தி, சகோதர ஐக்யம், முயற்சியின் பயன் முதலிய விஷயங்கள் கதா ரூபமாகத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. மிக்க விரைவாய் எழுதி அச்சிட்டு வெளிவரும் இப்புஸ்தகங்களில் குறைவுகள் இருப்பது இயல்பே. ஆயினும்,

'குற்றம் களைந்து குணங்கொள்வ தெஞ்ஞான்றும்
கற்றறிந் தோர்தங் கடன்'

ஆகலின், கற்றுணர்ந்த பெரியோர் நல்வரவு கூறி அங்கிகரிப்பரென் றெதிர்பார்க்கின்றோம்.

T. A. R.



அட்டவணை—CONTENTS

பாடம்.		பக்கம்.
1.	கடவுள். God	1
2.	ஜார்ஜ் ராஜா. King George	3
3.	என் தாய். My Mother	5
4.	என் தகப்பன். My Father	7
5.	என் உபாத்தியாயர். My Teacher	9
6.	தவளையும் சுண்டெலியும். The Frog and the Mouse.	10
7.	பிள்ளைகளைச் சாய்ந்தாடச்செய்தல். (*Verse.*) Nursery Song	12
8.	புருவும் எறும்பும். The Dove and the Ant ...	13
9.	பசு. Cow	15
10.	நரியும் காக்கையும். The Fox and the Crow. (*Verse.*)	16
11.	விளக்கும் விட்டில் பூச்சியும். The Lamp and the Moth	17
12.	சிங்கமும் எலியும். The Lion and the Rat	19
13.	அடிக்கு முத்தம். A Kiss for a Beating	20
14.	நிலாக் காட்டல். Conversation with the Moon. (*Verse.*) Nursery Song...	22
15.	குருவும் சீஷனும். The Priest and his Disciple ...	24
16.	சவரம் செய்தல். Shaving	26
17.	கொக்கும் அன்னமும். A Stork and a Swan ...	27
18.	தண்ணீருக்குப் போதல். Going for Water	29
19.	காகமும் குடமும். The Crow and the Pitcher ...	31
20.	பொம்மைக் கல்யாணம். Doll Marriage	33
21.	றிக்ஷா வண்டி. The Rickshaw	35


பாடம். பக்கம்.

22. விவேகமான மறுமொழி. Wise Reply 37
23. பிள்ளைகளைக் கைவீசச் செய்தல். (*Verse.*) Nursery Song 39
24. பூனை. The Cat 41
25. பிராணிகளின் தொனி. Voice of Animals and Birds. 42
26. செல்வம் நிலையாது. Wealth is unsteady. (*Verse.*) ... 43
27. ஓநாயும் கொக்கும். The Wolf and the Stork ... 44
28. குழந்தைகளைத் தாலாட்டுதல். Cradle Song. (*Verse.*)... 46
29. சோம்பேறிப் பையன். Lazy boy. (*Verse.*)... ... 47
30. கழுதையும் நாயும். The Ass and the Dog 48
31. குரங்கும் எலிப்பொறியும். The Monkey and the Trap. 51
32. கிளிப் பாடல். Parrot Song 53
33. சிறுவனும் வேங்கைப்புலியும். The Tiger and the Boy. 54
34. மங்களம். Invocation of Blessings 56

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

1. கடவுள்



1. இராமன். அப்பா! இந்தப் படத்தில் காணப்படுவது என்ன?

2. தகப்பன். மகனே! இது ஒரு மரம்.

3. இராமன். இது எப்படி இங்கு வந்தது?

4. தகப்பன். இது வித்திலிருந்து முளைத்தது.

5. இராமன். வித்து என்றால் என்ன? அது எப்படி மரமாயிற்று?

6. தகப்பன். வித்து என்றால் விதை; அதைப் பூமியில் புதைத்தால் அது மூலத்து மரமாகிறது.

7. இராமன். அதை மரம் ஆக்கினது யார்?

8. தகப்பன். கடவுள்.

9. இராமன். கடவுள் என்பவர் யார்? அவர் எங்கே இருக்கிறார்?

10. தகப்பன். அவர்தான் இந்த உலகத்தையும் அதிலுள்ள எல்லா வஸ்துக்களையும் சிருஷ்டித்தவர். அவர் எங்கும் இருக்கிறார்.

11. இராமன். அவர் விதையை எப்படி மரமாக்கினார்?

12. தகப்பன். அவர் விதையிலிருந்து மூல உண்டாகும்படி செய்து, அந்த மூல பருத்து மரமாவதற்கு வேண்டியதைக் கொடுக்கிறார்.

13. இராமன். விதை மூலத்து மரமாவதற்கு வேண்டியது என்ன?

14. தகப்பன். பனியும் மழையும் வெயிலும்.

15. இராமன். அவை எங்கேயிருந்து வருகின்றன?

16. தகப்பன். கடவுள் அவைகளைக் கொடுக்கிறார். அவர் மரத்தைக் காப்பாற்றுகிறார். அதிலே புஷ்பம் உண்டாகவும் காய் காய்க்கவும் செய்கிறார்.

17. அதேமாதிரியாகக் கடவுள் பிள்ளைகளுக்கும் வேண்டியதைக் கொடுக்கிறார். அவர் அவ

களைக் காப்பாற்றுகிறார்; அவர்களை நேசிக்கிறார். அவர்கள் நல்லவர்களாய் இருந்தால் ஆசீர்வதிக்கிறார்.

18. ஒரே ஒரு கடவுள் உண்டு. அவர் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் தருவார். அவரை ஒருபோதும் மறவாதே.

கடவுளை வணங்கு.

---

2. ஜார்ஜ் ராஜா



1. பிள்ளைகளே! இந்தப் படத்தில் காணப்படுவது யார் என்று நீங்கள் சொல்லுவீர்களா? இவர் தான் நமது ராஜா. இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்று பெயர். இவர் இப்போது நம்மை ஆண்டுவருகிறார். இவருக்கு முன் நமது ராஜா

வாக இருந்தவருக்கு எட்வர்ட் ராஜா என்று பெயர். அவர் மிக்க அன்பும் பொறுமையும் உடையவர். அவருடைய மகன் தான் இவர்.

2. இவருடைய மனைவிக்கு மேரி ராணி என்று பெயர். அந்த அம்மாள் தான் நமது ராணி. நமது ராணியும் அரசரும் இந்தியாவுக்கு இரண்டு முறை வந்திருக்கிறார்கள். இளவரசராக இருக்கும் போது முதல் முறை வந்தார்; ராஜாவானபின்பு இரண்டாவது முறை வந்து டில்லியில் பட்டாபிஷேகம் செய்தார்.

3. நமது அரசருக்கு ஐந்து புத்திரரும் ஒரே புத்திரியும் உண்டு. மூத்த குமாரன் இவருக்குப் பின் நமது ராஜா ஆவார். அவருக்கு உவேல்ஸ் இளவரசர் என்னும் பட்டப்பெயர் உண்டு.


4. நமது அரசர் இந்தியாவுக்கு வந்தபோது பம்பாய்க்கும் போனர். ஜனங்கள் அவரைப் பார்க்கும்படி கிட்ட நெருங்கினர்கள். சேவகர் ஜனங்களை அதட்டினர்கள்.

5. நமது ராஜா அதைக் கண்டு, ஜனங்களை அதட்டாமல் தாராளமாகப் பார்க்கவிடும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அவர் எவ்வளவு நல்லவர் பாருங்கள். அவரிடத்தில் நாம் அன்புடையவர்களாய் இருக்கவேண்டும். ராஜா கடவுளுடைய பிரதிநிதி என்பதை நாம் மறக்கக் கூடாது.

கடவுள் ராஜனைக் காக்க.

---

3. என் தாய்



1. இவள் என் அருமையான தாய். இவளே என் அன்புள்ள தாய்.

2. இவளிடத்தில் நான் மிகவும் அன்பாய் இருக்கவேண்டும். மற்றவர்கள் என்னிடத்தில் அன்பாய் இருப்பதைவிட அவள் என்னிடத்தில் அதிக அன்புள்ளவளாய் இருக்கிறாள்.

3. நான் சிறு குழந்தையாக இருந்தபோது அவள் எனக்குப் பாலூட்டினாள்.

4. நான் அழும்போதெல்லாம், அவள் என்னைத் தூக்கித் தாலாட்டினாள். என் அழுகையை மாற்றினாள்.

5. நான் தூங்கும்போது என் பக்கத்திலிருந்து ஈ, எறும்பு என்னைக் கடிக்காதபடி காப்பாற்றினாள்.

6. நான் தவழவும் நடக்கவும் கற்பித்தவள் அவளே.

7. தொட்டிலிலும் கட்டிலிலும் தோள்மேலும் மார்மேலும் வைத்து என்னை முத்தமிட்டவள் அவள்தான்.

8. நான் ஒருமுறை காயலாய் இருந்தேன். அப்பொழுது அவள் பட்ட கஷ்டம் மிகவும் அதிகம். அவள் வயித்தியரிடத்தில் போய் மருந்து வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தாள்.

9. எனக்கு வேண்டும்போது ஆகாரம் கொடுத்தாள். நான் கடவுள் கிருபையால் சுகம் அடைந்தேன்.

10. எனக்கு உடுப்பு வேண்டும்போது துணிக் கடைக்கு இட்டுக்கொண்டு போனாள். நல்ல துணி வாங்கி உடுப்புத் தைத்துக் கொடுத்தாள்.

11. நல்ல ஆபரணங்கள் இட்டு அழகு பெறச் செய்தாள். அப்பா, அம்மா, அக்கா என்று பேசக் கற்பித்தாள்.

12. ஆதலால் நான் அவளிடத்தில் என்றும் மாறாத அன்பு உடையவனாக இருக்க வேண்டும்.

உன் தாயை மறவாதே.

4. என் தகப்பன்



1. இவர் என் தகப்பன். இவரிடத்தில் நான் அன்பாய் இருக்கிறேன்.

2. இவர் என்னிடத்தில் அன்பாய் இருக்கிறார். என்மேல் பட்சம் வைத்து எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கிறார்.

3. என்னைப் போஷிக்கும்படி அவர் வேலை செய்து கஷ்டப்படுகிறார்.

4. என் தகப்பனார் ஒருநாள் என்னைக் கூப்பிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். என்னைப் படிப்பிக்கும்படி உபாத்தியாயருக்குச் சொன்னார். ஆகையால்தான் நான் இப்போ பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன்.

5. நான் பிரதிதினமும் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டுமென்று அவர் விரும்புகிறார். வீட்டிலே கிரமமாகப் பாடத்தைப் படிக்கவேண்டுமென்று அவர் எனக்குச் சொல்லுகிறார். புஸ்தகத்தைக் கிழித்துவிட்டாலும் இழந்துவிட்டாலும் மறுபடியும் அவர் வாங்கிக் கொடுக்கிறார். நான் புத்திமானாக வரவேண்டுமென்பதே அவருடைய விருப்பு.

6. வீட்டில் இருக்கும்போது மாட்டைப்பற்றியும் ஆட்டைப்பற்றியும் தம்மைச் சுற்றியிருக்கிற மற்ற வஸ்துக்களைப்பற்றியும் அவர் எனக்குச் சொல்லுகிறார்; தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் செடிகளைக் காண்பிக்கிறார்; வயலிலுள்ள நெல்லைக் காண்பிக்கிறார்; கால்வாயிலுள்ள ஜலத்தைக் காண்பிக்கிறார். இவைகள் எல்லாம் எப்படி உண்டாகின்றனவென்று அவர் எனக்குப் போதிக்கிறார்.

7. மாம்பழம் வாழைப்பழம் முதலிய பழங்களைச் சாப்பிடலாம் என்கிறார். முள்ளுக்குக் கிட்டப் போனால் தைக்கும் என்றும், பாம்புக்குக் கிட்டப் போனால் கடிக்கும் என்றும் சொல்லுகிறார்.

நான் என் தகப்பனிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.

---

5. என் உபாத்தியாயர்



1. இதோ! படத்தைப் பார். இதில் ஓர் உபாத்தியாயர் நாற்காலியின்மேல் உட்கார்ந்திருக் கிறார். ஒரு பையன் பலகையின்மேல் உட்கார்ந்து இருக்கிறான்.

2. உபாத்தியாயர் அவனுக்குப் பாடம் சொல் லிக்கொண்டிருக்கிறார்.

3. கிரமமாகப் பாடம் படிக்காதவர்களை உபாத் தியாயர் தண்டிப்பார்.

4. தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்குப் போ.

5. உன் பாடங்களைக் கிரமமாக படித்து ஒப்புவி.

6. நீ பள்ளிக்கூடத்தில் பேசவும் விளையாட வும் கூடாது.

7. உனக்குத் தெரியாதவைகளை உபாத்தியாயரிடத்தில் கேட்டு அறிந்துகொள்.

8. மற்றப் பிள்ளைகளோடு சண்டை செய்யாதே.

9. கணக்குப் போட உனக்குத் தெரியாவிட்டால் உன் தோழனுடைய கற்பலகையைப் பார்த்து எழுதாதே. இது மிகவும் தப்பிதம்.

10. கல்வியில் கண்ணும் கருத்துமாய் இருந்து தேர்ச்சி அடைய வழி பார்.

11. உன் உடம்பும் உடுப்பும் சுத்தியாக இருக்க வேண்டும்.

12. சரியான காலத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போ.


13. திருடுதல், பொய் பேசுதல் முதலிய கெட்ட பழக்கங்கள் உன்னிடத்தில் உண்டாகாத படி பார்த்துக்கொள்.

உன் உபாத்தியாயருக்குக் கீழ்ப்படி.

---

6. தவளையும் சுண்டெலியும்

1. ஒரு சுண்டெலி ஒரு தவளையோடு சிநேகம் செய்துகொண்டது. ஒருநாள் அச்சுண்டெலி ஒரு ஆற்றைத் தாண்டிப் போக வேண்டியதாக இருந்தது. ஆனால் தண்ணீரில் இறங்கிப் போவதற்கு அச்சுண்டெலியால் சாத்தியப்படவில்லை. சுண்டெலி தவளையிடத்தில் போய் தான் ஆற்றைத் தாண்டிப்போக உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டது.



2. தவளை சுண்டெலியைத் தன் முதுகின் மேல் ஏற்றிக்கொண்டு ஜலத்தில் நீந்திப்போய் ஆற்றின் மறுகரையில் சேர்ப்பதாக ஒப்புக்கொண் டது. சுண்டெலியை மிகவும் பத்திரமாகக் கொண்டுபோவதாகச் சொல்லி, தவளை அதின் காலைத் தன் இடுப்பில் ஒரு கயிற்றால் கட்டிக் கொண்டது.

3. பின்பு தவளை தண்ணீரில் இறங்கிப் போ யிற்று. கொஞ்சத்தூரம் போனவுடன் அது திடீரென்று நீரில் முழுகிச் சுண்டெலியையும் இழுத்துக்கொண்டு கீழே போயிற்று. சுண்டெலி மூச்சுவிடமாட்டாமல் கீச்சிட்டுத் தவித்தது.

4. அப்பொழுது மேலே பறந்துகொண் டிருந்த ஓர் பருந்து தண்ணீரில் உண்டான ஓசை யைக் கேட்டது. அது உடனே அம்புபோலக் கீழே பறந்து வந்து சுண்டெலியைக் கௌவி எடுத்துக்கொண்டு போயிற்று.

5. சுண்டெலியைக் கொண்டுபோகவே பெரிய தவளை ஒன்று கூட வருவதைக் கண்டது. பருந்து மிகவும் சந்தோஷத்தோடு அவைகளைக் கொண்டுபோய் ஒரு மரத்தின் மேல் வைத்துக் கொண்டு முதலில் தவளையைப் பட்சித்தது. அப்பொழுது கயிறு அறுந்து சுண்டெலி கீழே விழுந்து தப்பி ஓடிற்று.

கெடுவான் கேடு நினைப்பான்.
ஒருபோதும் ஒருவருக்கும் கேடு நினையாதே.

---

7. பிள்ளைகளைச் சாய்ந்தாடச் செய்தல்



1. சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு
   சாயக் கிளியே சாய்ந்தாடு
2. குத்து விளக்கே சாய்ந்தாடு
   கோயிலில் பாம்பே சாய்ந்தாடு
3. சித்திரப் பாவையே சாய்ந்தாடு
   செல்வ மணியே சாய்ந்தாடு

4. பச்சைக் கிளியே சாய்ந்தாடு
பவழக் கொடியே சாய்ந்தாடு
5. மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப் புறவே சாய்ந்தாடு
6. சுந்தர முத்தே சாய்ந்தாடு
சொர்ணத் திலகமே சாய்ந்தாடு
7. கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
கண்ணின் மணியே சாய்ந்தாடு
8. கொவ்வம் பழமே சாய்ந்தாடு
கோல மணியே சாய்ந்தாடு
9. பைம்பொற் சிலையே சாய்ந்தாடு
பாலக் கொழுந்தே சாய்ந்தாடு

8. புறவும் எறும்பும்

1. ஒரு எறும்பு தண்ணீர் குடிக்கக் குளத்தின் அருகே போனது. அது தண்ணீர் குடிக்கும் போது தவறிக் குளத்தில் விழுந்துவிட்டது. அப்பால் வெளியேறச் சக்தியில்லாமல் அது முழுகிப்போகும் நிலைமையில் இருந்தது.

2. ஒரு புறு இதைப் பார்த்துக்கொண்டு ஒரு மரத்தில் உட்கார்ந்து இருந்தது. அது எறும் புக்கு உதவிசெய்ய விரும்பினது.

3. உடனே அது ஒரு சுள்ளியை ஒடித்துக் குளத்தில் போட்டது. சுள்ளி தண்ணீரில் மிதக் கவே எறும்பு அதில் ஏறிக்கொண்டு பத்திர மாகக் கரை சேர்ந்தது.

4. இந்தச் சமயத்தில் வேடன் ஒருவன் புறுவை எய்வதற்காக அம்பை வில்லில் வைத்




துக் குறிபார்த்துக்கொண்டிருந்தான். இதைக் கண்ட எறும்பு தனக்குச் சகாயம் செய்த புரூவுக்கு உதவிசெய்யத் தீர்மானித்தது. அப்பால் அது மெதுவாக வேடனுக்கு சமீபத்தில் போய் அவன் காலைக் கடித்தது.

5. உடனே வேடன் திடுக்கிட்டுக் கையை அசைத்துக்கொண்டு அம்பைவிடவே குறி தவறிப்போயிற்று. இந்தச் சந்தடியில் புரூ ஓடிப் போயிற்று. எறும்பு செய்த உதவியால் புரூ உயிர் பிழைத்தது அல்லவா?

ஒருவர் செய்த நன்றியை மறவாதே.

9. பசு



1. பிள்ளைகளே! படத்தில் நீங்கள் காண்பது என்ன? பசுமாடு. அது சாதாரணமாக நமது வீடுகளில் காணப்படும் மிருகம். அது நாலு காலுள்ள பிராணிகளில் ஒன்று.

2. பசு மிகவும் சாதுவான மிருகம். அதற்குக் கண்கள் எத்தனை? இரண்டு. தலையில் இருப்பது என்ன? கொம்புகள். பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. நீ அதற்குக் கெடுதி செய்தால் அது உன்னை முட்டும்.

3. பசுவுக்கு இரண்டு செவிகள் உண்டு. அவை தலையில் இருபுறத்திலும் இருக்கும்.

4. பசுவுக்கு நாலு கால்களும் ஒரு வாலும் உண்டு. ஈயாவது கொசுகாவது அதின்மேல் உட்கார்ந்து அதற்கு இம்சை செய்தால் அது வாலை வீசி அவைகளை ஓட்டிவிடும்.

5. பசுமாடு பால் கொடுக்கிறது. பால் மிகவும் ருசியானது. பாலிலிருந்து தயிரும் மோரும் வெண்ணெயும் நெய்யும் செய்துகொள்ளுகிறோம்.

6. பசு புல்லையும் வைக்கோலையும் தின்று ஜீவிக்கிறது. கொள்ளு, கடலை, தவிடு முதலிய வைகளையும் அது பிரியமாகச் சாப்பிடும். சாப்

பிட்டபின், அது தான் உட்கொண்ட ஆகாரத்தை மறுபடியும் வாய்க்குள் வரச் செய்து மெல்லும். அதற்கு அசைபோடுதல் என்று பெயர்.

7. பசுக்களில் பல நிறங்கள் உண்டு. ஆனல் பால் எல்லாம் வெள்ளே நிறம்தான்.

8. பசுவின் குட்டிக்குப் பசுக்கன்று என்று பெயர். பிள்ளைகளே! நீங்கள் பசுவினிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.

யாதொரு பிராணிக்கும் இம்சை செய்யாதே.

---

10. நரியும் காக்கையும்



1. பசியால் வருந்தி நரி யொன்று
பதைத்துப் பதைத்து குதித் தோடி

2. வாயில் வடையைக் கௌவிக் கொண்டு
வன்னி மரத்தில் அமர்ந் திருந்த

3. காகந் தனைக்கண் டதன் கிட்டக்
கருத்தாய்ச் சென்று அதைப் பார்த்து

4. ஐயா உனைப்போல் அழகுள் ளோர்
அவனி தனில்யான் பார்த்த தில்லை

5. அழகுக் கேற்ற குர லிருந்தால்
ஆரே உனக்கு நிகரா வார்

6. எனவே காக்கை மதி மயங்கி
ஏமாந் ததுவே மோசம தாய்

7. கருநிறக் காகம் வாய் திறந்து
காகா எனவே கத் தியது

8. உடனே வடையும் நழு விற்று
ஓடிற்றே நரி தூக்கிக் கொண்டு

9. அதனுல் காகம் மனம் வருந்தி
அகன்றது தன்பால் நாணுற்றே.


10. முகஸ்துதி பேசும் மாந்தர் தமை
முழுதும் வெறுத்து நீக்கிடுவீர்.

---

11. விளக்கும் விட்டில் பூச்சியும்

1. ஒரு மேசையின் மேல் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அவ்விளக்கின் தட்டிலி ருந்த விட்டில் பூச்சி கிட்ட இருந்த தாயைப் பார்த்து 'அம்மா, இந்த விளக்கு எவ்வளவு அழ காய் எரிகிறது! கிட்டப் போகட்டுமா' என்றது.

2. தாய், 'போகவேண்டாம். போனுல் எரிந்து போவாய்' என்று சொல்லிற்று. சிறு பூச்சி 'அம்மா, நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கி றது; நான் என் எரிந்துபோகிறேன்? அதைப் பார்த்தால் அழகிய புஷ்பம்போல இருக்கிறது.



நான் போய் அதிலுள்ள தேனைக் குடித்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிற்று.

3. தாய், 'மூடக் குழந்தையே! நீ நினைக்கிற படி அது புஷ்பமல்ல, நெருப்பு; நீ அதன் கிட்டப் போனால் சாவாய். நானும் முன்னே அப்படித் தான் நினைத்துக் கிட்டப் போய்ச் சுட்டுக்கொண்டேன்' என்று சொல்லிற்று.

4. சிறு பூச்சியோ தாயின் சொல்லைக் கேளாமல் விளக்கின் கிட்டப் போயிற்று. ஆ! இந்தத் தீபம் எவ்வளவு அழகாய் எரிகிறது! இங்கே என்ன கெடுதி இருக்கிறது? என் தாய் சொன்னதெல்லாம் பொய்; அந்தக் கிழவிக்கு என்ன தெரியும்?

5. இப்படிச் சொல்லிக்கொண்டு விளக்குத் தண்டில் ஏறிப் போயிற்று. 'ஆ! நான் இனிய தேனைக் குடிப்பேன்' என்று சொல்லிக்கொண்டு

பறந்து போய் எரிந்துகொண்டிருந்த தீபத்தின் சுவாலையில் விழுந்தது. உடனே எரிந்து இறந்தது.

பெரியோர் வார்த்தையைத் தள்ளாதே.

---

12. சிங்கமும் எலியும்



1. ஒரு சிங்கம் இரைதேடித் தின்றுவிட்டு, ஒரு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. அந்த மரத்தின் பக்கத்திலிருந்த வளைகளில் வசித்த சில எலிகள் அதின்மேல் ஏறி விளையாடிக் கொண்டிருந்தன.

2. சிங்கம் விழித்துக்கொண்டு, அவ்வெலிகளில் ஒன்றைப் பிடித்துக் கொல்லப் பார்த்தது. அப்பொழுது அவ்வெலி 'ஸ்வாமி! நானே சிறு பிராணி. தங்கள் பலத்திற்கு நான் எம்மாத்திரம்? நான் ஒரு குழந்தையைப்போலத் தங்க

ளிடத்தில் விளையாடினேன்! இதற்காக என்னைக் கொல்லலாமா' என்றது.

3. சிங்கம் மனது இரங்கி அந்த எலியைக் கொல்லுவது தன் கனத்திற்குக் குறைவென்று எண்ணி விட்டுவிட்டது. எலி உயிர் பிழைத்து ஓடிப்போயிற்று.

4. சில நாட்களுக்குப் பின் சிங்கம் இரைதேடப் போயிற்று. அப்பொழுது அது வேடன் விரித்து வைத்த வலையில் சிக்கிக்கொண்டது; தப்பிப்போக வகை தெரியாமல் தவித்தது.

5. இச்சமயத்தில் முன் சிங்கம் கொல்லாது விட்டுவிட்ட எலி அதைக் கண்டது. உடனே அது சிங்கத்தினிடத்தில் போய் 'சிநேகிதா பயப்படாதே; இதோ நான் உன்னை ஒரு தொடிப் பொழுதில் தப்புவிக்கிறேன் பார்' என்றது. பிறகு தன் இனத்தார் எல்லோரையும் அது அழைத்து வந்து பற்களால் வலையை அறுத்துச் சிங்கத்தை விடுவித்தது.

6. சிங்கம் எலி செய்த நன்றிக்காக மிகவும் சந்தோஷப்பட்டது. அதுமுதல் சிங்கமும் எலியும் மிகவும் சிநேகமாய் இருந்தன.

ஒரு நன்றி செய்தாரை ஒருபோதும் மறவாதே.

---

13. அடிக்கு முத்தம்

1. இராமன் சிறு-பையன். அவனுக்கு விஷமம் செய்வதில் வெகு பிரீதி. சிறுவன் ஆதலால் நல்லது எது கெட்டது எது என்று அவனுக்



குத் தெரியாது. சும்மா ஏதாவது குறும்பு செய்துகொண்டே இருப்பான்.

2. அவன் பள்ளிக்கூடத்துக்குப் போகக் கூடிய வயதுடையவன் அல்ல. வீட்டில் தொந் தரவு செய்யாமல் இருக்கும்படி தாயார் அவனை அவன் அக்காள் கண்ணம்மாளோடு பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவது வழக்கம்.

3. இராமன் பள்ளிக்கூடத்திற்குப் போனால் மற்றப் பிள்ளைகளைக் கிள்ளுவான், அடிப்பான்; அல்லது புஸ்தகங்களைக் கிழிப்பான்.

4. ஒருநாள் அவன் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது கண்ணம்மாளுடைய புஸ்தகத்தைக் கிழித்தான். அவள், 'அடே! புஸ்தகத்தை ஏன் கிழிக்கிறாய்' என்றாள். உடனே இராமன் அவளை அடித்தான்.

5. கண்ணம்மாள் அவனை அடிக்கக் கையை ஓங்கினாள். இதை எல்லாம் உபாத்தியாயர் பார்த்துக்கொண்டு இருந்தார். கண்ணம்மா அடிக்க எத்தனிப்பது சரியல்ல என்று அவர் கண்டார்.

6. 'கண்ணம்மா! சற்றுப் பொறு! உன் தம்பி சிறுவன். அவனுக்கு என்ன தெரியும்? அவனை நீ அடிப்பது சரியல்ல' என்றார். கண்ணம்மா 'அவன் என்னை அடித்தானே, நான் சும்மா இருக்கலாமா' என்றாள். உபாத்தியாயர், 'அவன் உன்னை அடித்ததற்காக நீ அவனை முத்தியிட்டால் நலமாய் இருக்கும்' என்றார்.

7. உபாத்தியாயர் சொன்ன பிரகாரம் கண்ணம்மா தன் தம்பிக்கு முத்தமிட்டாள். இராமன் தான் செய்த தப்பிதத்திற்காக அழுதான்.

தீமைக்குத் தீமை செய்யாதே.

---

14. நிலாக் காட்டல்

1. சிறு பிள்ளைகளுக்கு நிலாவைக் காண்பித்துப் பராக்குக்காட்டுவது நமது தேசத்தில் வழக்கம். சிறு குழந்தைகள் அழுது தொந்தரவுசெய்வதுண்டு; சில குழந்தைகள் சாப்பாடு வேண்டாமென்று அழுவதுண்டு. அச்சமயங்களில் தாய்



மார் நிலாவைக் காட்டி சில பாட்டுக்களைப் பாடிக் குழந்தைகளுடைய அழுகையை மாற்றுவார்கள். இவ்விதமாக நிலாவோடு பேசுவதுபோலத் தாய் மார் பாடுவது பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தை யும் மன உல்லாசத்தையும் கொடுக்கும்.

2. இதோ படத்தில் ஒரு தாய் தன் குழந் தையை இடுப்பில் வைத்துக்கொண்டு நிலாவைக் காட்டுவதைப் பார். அந்தக் குழந்தை பூரண

சந்திரனை எவ்வளவு அவாவுடன் பார்க்கிறது பார். அப்பொழுது தாய் பின்வருமாறு நிலாவோடு பேசி அது மறுமொழி சொல்வது போலத்தானே சொல்லிக் குழந்தையை உற்சாகப் படுத்துகிறாள் :—

1. நிலாவே நிலாவே, எங்கே போறாய்.
2. மலையாம் குளத்து, மண்ணெடுக்கப் போறேன்.
3. மண் என்னத்துக்கு, செப்புப் பண்ண.
4. செப்பு என்னத்துக்கு, வராகன் போட.
5. வராகன் என்னத்துக்கு, மாடு வாங்க.
6. மாடு என்னத்துக்கு, சாணி போட.
7. சாணி என்னத்துக்கு, வீடு மெழுக.
8. வீடு என்னத்துக்கு, பிள்ளை வளர்க்க.
9. பிள்ளை என்னத்துக்கு, தவழ்ந்து விளையாட.
10. ஓலைப் பாயிலே, ஓடி விளையாட.
11. ஈச்சம் பாயிலே இருந்து விளையாட.
12. பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட.

---

15. குருவும் சீஷனும்

ஒரு குருவினிடத்தில் ஒருவன் போய், 'ஐயா நீர் என்னை உம்முடைய சீஷனாக வைத்துக் கொள்ளவேண்டும்' என்றான். அவர் அப்படியே வைத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். பிறகு சீஷன் அவரை நோக்கி, 'ஸ்வாமி, நான் உத்தமன் ஆகவேண்டும். அதற்கு என்ன செய்வது' என்றான். குரு அவனைப் பார்த்து 'அடா! சீஷா



நீ உத்தமனாக விரும்பினால் அதிக கஷ்டப்பட வேண்டும். துஷ்டன் என்று பெயர் எடுப்பது வெகு சுலபம். ஆயினும் நீ உத்தமனாக விரும்பினால் பின்வரும் பன்னிரண்டு நீதிகளையும் கவனித்து அவைகளின்படி நடக்கவேண்டும்' என்றார். சேஷன் அவை எவை என்று கேட்க, குரு சொல்லுகிறார் :—

1. கடவுளுக்குப் பயந்து நட.
2. அரசனுக்கு அடங்கு.
3. தாய் தகப்பனைக் கனம் பண்ணு.
4. பிறன் பொருளை இச்சியாதே.
5. பொறுமை கொள்ளாதே.
6. ஒருபோதும் பொய் பேசாதே.
7. களவு செய்யாதே.
8. கொலை செய்யாதே.
9. மதுபானம் செய்யாதே.
10. விபசாரம் செய்யாதே.

11. கோபம் கொள்ளாதே.

12. ஒருவரையும் பகைக்காதே.

இவைகளை நீ கவனித்து நடந்தால் உத்தமன் ஆவாய் என்றார். சீஷன் அப்படியே நடந்து வந்தான். மிகவும் உத்தமன் என்று பேரெடுத்தான்.

---

16. சவரம் செய்தல்



1. இந்தப் படத்திலே இரண்டு பேர் உட்கார்ந்து இருக்கிறதைக் காண்கிறோம். ஒருவன் கையில் கத்தி வைத்திருக்கிறான்.

2. அவன் என்ன செய்கிறான்? கத்தியினால் மற்றவனுடைய தலைமயிரைச் சிரைத்துக்கொண்டிருக்கிறான். இவனுக்கு அம்பட்டன் என்று

பெயர். தாவிதன் என்று சொல்லுவதும் உண்டு. தாட்டுப்புறங்களில் இவனுக்குப் பரியாரி என்றும் பெயர் உண்டு.

3. இவனுக்குப் பக்கத்தில் ஒரு கிண்ணம் இருக்கிறது. அதில் அவன் தண்ணீர் வைத்திருக்கிறான். சவரம் செய்யும்போது தோ எடுக்காதபடி அவன் அடிக்கடி தண்ணீரால் தலையை நனைத்துக்கொள்ளுகிறான்.

4. மற்றவன் கையில் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்க்கிறான். ஏன் பார்க்கிறான்? அம்பட்டன் சரியாய் சவரம் செய்கிறானே என்று பார்க்கிறான்.

5. நமது தேசத்தில் சவரம் செய்வதற்கென்று அம்பட்டர் ஏற்பட்டிருக்கிறார்கள். அவர்களைத் தவிர வேறொருவரும் சவரம் செய்யமாட்டார்கள்.

6. அம்பட்டன் கையில் வைத்திருப்பது சவரக்கத்தி. அது எஃகினால் செய்யப்படுகிறது. சவரக்கத்திகள் எல்லாம் சீமையிலிருந்து வருகின்றன. நமது தேசத்திலே செய்யப்படும் கத்திகளும் உண்டு. அவை அவ்வளவு உசிதமானவை அல்ல.

17. கொக்கும் அன்னமும்

1. ஒரு கொக்கு தவளைகளைப் பிடித்துத் தின்பதற்காக ஒரு குளக்கரையில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட தவளைகள் எல்லாம் தண்ணீரில் போய் ஒளித்துக்கொண்டன.



2. கொக்கு மிகவும் விசனப்பட்டுக்கொண் டிருந்தது. அச்சமயத்தில் ஒரு அன்னப்பட்சி அவ்வழியாகப் பறந்து வந்தது. கொக்கு அங்கே இருப்பதைக் கண்டு அதுவும் குளக்கரை யில் வந்து உட்கார்ந்தது.

3. அன்னப்பட்சி கொக்கைப் பார்த்து 'நீ ஏன் இங்கே விசனமாய் உட்கார்ந்திருக்கிறாய்' என்றது. கொக்கு 'எனக்கு இரண்டு மூன்று நாளாய் ஆகாரம் ஒன்றும் அகப்படவில்லை; இந் தக் குளத்திலுள்ள தவளைகளைப் பிடித்துத் தின் னலாமென்று இங்கே வந்து உட்கார்ந்திருக்கி றேன்' என்றது.

4. பிறகு கொக்கு அன்னத்தைப் பார்த்து 'நீ எங்கே போகிறாய்' என்றது. அன்னம் 'நான் தெய்வ லோகத்திற்குப் போகிறேன்' என்று சொல்லிற்று.

5. கொக்கு 'தெய்வலோகம் எப்படி இருக் கும்' என்றது. 'தெய்வலோகம் பொன்போலப்

பிரகாசமாய் இருக்கும்; அங்கே நமக்கு வேண்டியதெல்லாம் அகப்படும்' என்றது அன்னம்.

6. 'சரிதான், அங்கே தவளைகள் உண்டா' என்று கொக்கு கேட்டது. அன்னம், 'என்ன புத்தியீனமான பேச்சு பேசுகிறாய்? தெய்வலோகத்தில் தவளைகளைப்போலும் அவலக்ஷணமான பிராணிகள் கிடையாது' என்றது. கொக்கு, 'நீயே உன் தெய்வலோகத்தை மெச்சிக்கொள்; எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை' என்று சொல்லிப் பரிகாசம் பண்ணிவிட்டுப் பறந்து போயிற்று.

பன்றிகள் முத்தின் அருமை அறியுமா?

---

18. தண்ணீருக்குப் போதல்

1. இதோ! இத்தப் படத்தைப்பார். இதில் ஒரு பெண் இடுப்பில் குடம் வைத்துக்கொண்டு நிற்கிறாள். அவள் கையில் இன்னும் என்ன வைத்திருக்கிறாள்?

2. கயிறு வைத்திருக்கிறாள். வேறு என்ன அவள் கையில் இருக்கிறது? கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்குக் கோலு பட்டை வைத்திருக்கிறாள்.

3. இவள் எங்கே போகிறாள்? தண்ணீர் மொள்ளப் போகிறாள். சில வீடுகளில் சுத்த ஜலமுள்ள கிணறுகள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட வீடுகளிலுள்ள பெண்கள் தண்ணீர்



மொள்ள வேளியேயுள்ள கிணறுகளுக்குப் போவார்கள்.

4. சுத்த ஜலம் நமது சுகத்துக்கு அவசியமானது. இந்தப் பெண் குடத்தை நன்றாய்த் தேய்த்து அலம்பி எவ்வளவு சுத்தியாய் வைத்திருக்கிறாள் பார். அவள் கிணற்றண்டை போனவுடன் குடத்தைக் கீழே வைப்பாள். பிறகு கயிற்றைக் கோலுபட்டையில் கட்டி கிணற்றுக்குள் விட்டு ஜலம் எடுப்பாள். அப்

பால் குடத்தை நிரப்பிக்கொண்டு வீட்டுக்கு வருவாள்.

5. அவள் குடம் பித்தளையினால் செய்யப் பட்டிருக்கிறது. அதை எவ்வளவு பிரகாச மாய்த் தேய்த்து வைத்திருக்கிறாள் பார்.

6. கையிலிருக்கும் கோலு பட்டை பனை ஓலையினால் செய்யப்பட்டது. பனை ஓலையை இன்னும் அநேக விதமாய் உபயோகப்படுத்த லாம்.

7. இந்தப் பெண் மிகவும் சுறுசுறுப்பு உள்ளவள். நாமும் எப்பொழுதும் சுறுசுறுப் பாய் இருப்போமாக.

சோம்பல் தரித்திரத்தை வருவிக்கும்.

---

19. காகமும் குடமும்



1. தாகமாயிருந்த ஒரு காகம் தண்ணீர் குடிக்க அங்கும் இங்கும் ஓடிப் பார்த்தது. ஜலம் எங்கும் அகப்படவில்லை. அப்பால் அது ஒரு மரத்தில் உடகார்ந்து கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தது.

2. பிறகு ஒரு வீட்டு முற்றத்தில் ஒரு பாத்திரம் இருப்பது அதன் கண்ணுக்குத் தென் பட்டது. உடனே காகம் பறந்துபோய் அப் பாத்திரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து பார்த் தது. அதில் தண்ணீர் பாதிவரையிலும்தான் இருந்தது. ஜலம் அதன் வாய்க்கு எட்டவில்லை.

3. காகம் தண்ணீர் குடிக்கத் தலையை உள்ளே விட்டு எட்டி எட்டிப் பார்த்தது. அதினால் சாத்தியப்படவில்லை. பிறகு அதற்குப் பலவித மான உபாயங்கள் மனதில் தோன்றின.

4. அது பாத்திரத்தைக் கீழேதள்ளி உடைக் கப்பார்த்தது; அதைக் கவிழ்த்துவிடலாமென்று யோசித்தது. ஒன்றும் சரிப்படவில்லை. பிறகு அதற்கு ஒரு நல்ல உபாயம் தட்டுப்பட்டது.

5. பாத்திரத்தின் பக்கத்தில் சிறு கற்கள் நிறைய இருப்பதை அது கண்டது. அச் சிறு கற்களை அது ஒன்றொன்றாய் எடுத்துப் பாத்திரத்திற்குள் போட்டது. கற்களைப் போடப் போடத் தண்ணீர் மேலே எழும்பிற்று. காகம் தன் தாகம் தீரத் தண்ணீர் குடித்துவிட்டுப் பறந்துபோயிற்று.

எவ்வித கஷ்டம் நேரிட்டாலும் நாம் நன் றாய் யோசித்தால் ஏதாவது உபாயம் புலப்படும். அவ்வுபாயத்தினால் நாம் நமது கஷ்டத்தை நீக்கிக்கொள்ளலாம்.

புத்திமான் பலவான்.

---

20. பொம்மைக் கல்யாணம்



1. இந்தப் படத்தில் அநேக பெண்பிள்ளைகள் கும்பலாக உட்கார்ந்திருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கிற சிறு பெண்கள் போலக் காணப்படுகிறார்கள்.

2. அவர்களில் ஒரு பெண் தட்டில் ஏதோ வைத்துக்கொண்டு மற்றப் பெண்களுக்குக் கொடுக்கிறாள். அவர்களுக்கு முன்னே ஒரு சிறிய பந்தல் போடப்பட்டு இருக்கிறது. அந்தப் பந்தல் வாழை, மாவிலை, தோரணம் முதலியவற்றால் சிங்காரிக்கப்பட்டிருக்கிறது.

3. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது இது என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பந்தலுக்குள் இரண்டு சிறு பொம்மைகள் இருக்கின்றன அல்லவா? ஆகையால் இது ஒரு பொம்மைக் கல்யாணம் என்று தோன்றுகிறது.

4. நமது தேசத்தில் சிறுமிகள் பலர் சேர்ந்து இப்படிப்பட்ட கல்யாணம் செய்வது வழக்கம்.

இரண்டு பொம்மைகளைக் கல்யாணப்பெண் கல்யாணப்பிள்ளை என்று வைத்துக்கொண்டு, சாதாரணமான கல்யாணத்தைப் போலவே நடத்துவார்கள்.

5. பணக்காரராக இருக்கிற பெற்றூர் இக்கல்யாணங்களில் அதிக பணம் செலவுசெய்வதுண்டு. இவ்வித கல்யாணங்களிலுல் பிள்ளைகளுக்கு விளையாட்டும் உற்சாகமும் உண்டாகிறது. அவர்கள் கல்யாண காலங்களில் எவ்விதமான சடங்குகள் நடக்கின்றன என்பதை அறிகிறதற்கும் ஏதுவாகிறது.

சில பிள்ளைகள் பொம்மைக் கல்யாணம் செய்வதற்கு வேண்டிய வஸ்துக்களைச் சேகரித்துக் கொடுக்கும்படி பெற்றூரைத் தொந்தரவு செய்வதுண்டு. பின்வரும் பாடல், ஒரு சிறுபெண் பொம்மைக் கல்யாணம் செய்வதற்குத் தனக்கு ஆடை ஆபரணம் வாங்கிக் கொடுக்கும்படி தாயைக் கேட்பதைக் குறிக்கிறது:—

பொம்மைக் கலியாணம் புரியவே வேண்டும்.
கம்மல் ஜிமிக்கி கைக்குப் பொன் காப்பு
செம்மைப் பட்டாடை சிவப்புச் சிற்றுடை
அம்மா நீவாங்கி அளிப்பாய் எனக்கே.

---

21. ரிக்ஷா வண்டி



1. இதோ படத்தைப் பாருங்கள்! இதிலே என்ன காண்கிறீர்கள்? ஒருவன் இரண்டு சக்கர மூள்ள ஒரு வண்டியை இழுத்துக் கொண்டு போகிறான்.

2. இந்த வண்டிக்குப் பெயர் என்ன? இது தான் ரிக்ஷா வண்டி. இது இரண்டு பேர் உட் காரத்தக்கதாகச் செய்யப்பட்டிருக்கிறது.

3. இந்த வண்டியில் உட்காருவதற்கு ஒரு மெத்தை இருக்கிறது. இராக்காலத்தில் வேறு வண்டிகளோடு மோதிக்கொள்ளாதபடி காப்ப தற்காகவும், நமக்கு வழி நன்றாகத் தெரிவ தற்காகவும் இரண்டு பக்கமும் இரண்டு விளக்கு கள் போடப்பட்டு இருக்கின்றன.

4. வண்டியில் இருப்பவர்களுக்கு மழையா வது வெயிலாவது படாதபடி மேலே கூடாரம்

போடப்பட்டு இருக்கிறது. இதை வேண்டிய போது விரித்தும் மடித்தும் கொள்ளலாம்.

5. இந்த வண்டியில் இரண்டு பிள்ளைகள் உட்கார்ந்து இருக்கிறார்கள். இவர்கள் எங்கே போகிறார்கள்? பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். அவர்கள் படிப்பதில் எவ்வளவு பிரியமுள்ளவர்களாக இருக்கிறார்கள் பாருங்கள்.

6. இந்த வண்டியை இழுக்கிறவன் கூலிக்காரன். இவன் உன்னை வண்டியில் வைத்து இழுத்துக் கொண்டுபோய் நீ விரும்பிய இடத்தில் விட்டவுடன் அவனுக்கு கூலி கொடுக்க வேண்டும்.


7. இப்படியே அவன் வண்டி இழுத்து ஜீவனம் செய்கிறான். வண்டி இழுக்காவிட்டால் அவனுக்குச் சாப்பாடு அகப்படாது. ஆனபடியால்தான் அவன் கஷ்டப்படுகிறான்.

8. பிள்ளைகளே! நீங்களும் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டும். உங்களுடைய பாடத்தைக் கருத்தாய்ப் படிக்கவேண்டும். சோம்பலாக இருக்கப்படாது. அப்பொழுதுதான் நீங்கள் மேன்மை அடைவீர்கள்.

வேலை மேன்மைக்கு உரியது. சோம்பல் தரித்திரத்திற்குத் தாய்.

---

22. விவேகமான மறுமொழி



1. ஜகதிலகம் என்னும் பட்டணத்தில் ஒரு ராஜன் இருந்தான். அவன் ஒருநாள் அதிகாலையில் தூங்கி எழுந்தவுடன் தெருவை எட்டிப் பார்த்தான். அப்பொழுது ஒரு ஏழைப் பையன் தெருவில் சிந்திக்கிடந்த பண்டங்களைப் பொறுக்கித் தின்றுகொண்டு இருந்தான்.

2. அவனைப் பார்த்துவிட்டு ராஜா தலையை உள்ளே வாங்கினன். அப்பொழுது வாசற்படி தலையில் இடித்தது. அதினால் கொஞ்சம் இரத்தம் கண்டது.



3. உடனே அரசன் தனக்குள்ளே யோசித்தான். இன்று தூங்கி எழுந்து இந்தப் பையனைக் கண்டதினால் எனக்கு இந்தக் கெடுதி நேரிட்டது. பிரதி தினமும் யார் இவனைப் பார்க்கிறார்களோ அவர்களுக்கும் இதுவே நேரிடும். ஆதலால் இவனைக் கொலை செய்வதே தக்கது.

4. இப்படி ராஜன் நிச்சயித்துக் கொண்டு கொலையாளிகளைக் கூப்பிட்டுப் பையன் தலையை வெட்டிவிடும்படி கட்டளையிட்டான்.

5. காவலாளிகள் பையனைப் பிடித்துக் கொண்டு 'உன் முகத்தில் விழித்ததினால் அரசனுக்கு வாசற்படி தலையில் இடித்து இரத்தம் கண்டது. அதற்காக ராஜா உன் தலையை வெட்டச் சொன்னார், வா' என்று அழைத்தார்கள்.

6. அதைக் கேட்டுப் பையன் 'நான் ராஜாவைக் கண்டு ஒரு வார்த்தை சொன்னபிறகு என்

தலையை வெட்டிப்போடுங்கள்' என்றான். கொலை யாளிகள் அதற்குச் சம்மதித்து அவனை ராஜன் முன் நிறுத்தினார்கள்.

7. பையன் ராஜாவைப் பார்த்து வணங்கி 'ஸ்வாமி, என் முகத்தில் விழித்ததினால் உங்களுக்குக் கெடுதி நேரிட்டதாக என் தலையை வெட்டச் சொன்னீர்கள்; நான் தூங்கி எழுந்து உம்முடைய முகத்தைப் பார்த்ததினால் என் தலை போகிறதே! இதற்கு என்ன தீர்ப்புச் சொல்லுகிறீர்கள்' என்றான்.

8. அதைக் கேட்டு அரசன் அவமானம் அடைந்து பையனுடைய விவேகத்தை மெச்சி, அவனை விட்டுவிடும்படி கட்டளையிட்டான்.

சகுனம் பார்ப்பது புத்தியீனம்

23. பிள்ளைகளைக் கைவீசச் செய்தல்

1. கைவீ சம்மா கை வீசு
   கடைக்குப் போகலாம் கை வீசு
2. மிட்டாய் வாங்கலாம் கை வீசு
   மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
3. ஆப்பம் வாங்கலாம் கை வீசு
   அமர்ந்து தின்னலாம் கை வீசு
4. பூந்தி வாங்கலாம் கை வீசு
   பூர்த்தியாய் உண்ணலாம் கை வீசு
5. பழங்கள் வாங்கலாம் கை வீசு
   பரிந்து தின்னலாம் கை வீசு



6. சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு
7. காப்பு வாங்கலாம் கை வீசு
காலில் போடலாம் கை வீசு
8. சீப்பு வாங்கலாம் கை வீசு
சீவி முடிக்கலாம் கை வீசு
9. பொம்மை வாங்கலாம் கை வீசு
பொருத்தி ஆடலாம் கை வீசு
10. கோயில் சுற்றலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு
11. திருநாள் பார்க்கலாம் கை வீசு
திரும்பி வரலாம் கை வீசு
12. கைவீ சம்மா கை வீசு
கண்ணே மணியே கை வீசு.

24. பூனை



1. மோகனம் என்னும் சிறுவன் ஒரு பூனையோடு விளையாடிக்கொண்டு இருந்தான். அவனுக்கு அந்தப் பூனையின்மேல் வெகு பிரீதி. பூனைக்கும் அவன்மேல் அதிக இஷ்டம்.

2. அப்படி இருவரும் விளையாடிக்கொண்டிருக்கும்போது பையன் பூனையின் வாலைப் பிடித்து இழுத்தான். பூனைக்கு அதிகமாக நொந்தது.

3. பூனை அவனைப் பார்த்து 'மோகனம் நீ என் வாலை இழுத்ததினால் எனக்கு நோ எடுக்கிறது. இனிமேல் அப்படிச் செய்யாதே.

4. எனக்குக் கூர்மையான நகங்கள் உண்டு. நான் சந்தோஷமாக இருக்கும்போது அவைகளை உள்ளே இழுத்துக்கொள்வேன். இவ்வேளையில் என் பாதம் பட்டுப்போல மெதுவாய் இருக்கும்.

5. யாராவது எனக்குக் கோபம் உண்டாக்கினால் உடனே என் நகங்களை வெளியே நீட்டிப் பிறிவிடுவேன்.

6. என் கண்களோ மிகவும் கூர்மையானவை. எந்தச் சிறு வஸ்துவும் எனக்கு நன்முகத் தெரியும். என் முகத்தில் மீசை யுண்டு.

7. எனக்குப் பால், தயிர், மோர் இவைகளில் மிகவும் பிரியம். அவைகளை எங்கே வைத்தாலும் திருடிச் சாப்பிட்டு விடுவேன். ஆகையால் உன் வீட்டிலே அவை இருந்தால், அது என் கண்ணில் அகப்படாதபடி பத்திரம்பண்ணி வைத்துக்கொள்.

8. நான் வீடுகளிலே வாசம்பண்ணுகிறேன். என் குட்டிகளிடத்தில் நான் மிகவும் அன்பாய் இருக்கிறேன். நீ என் குட்டிகளுக்குக் கெடுதி செய்தால் நான் உன்னைத் தண்டிப்பேன். மோகனம் இவைகளைக் கேட்டு அப்பூனைக்குத் துன்பம் செய்வதை விட்டுவிட்டான்.

ஒரு பிராணிக்கும் துன்பம் செய்யாதே.

---

25. பிராணிகளின் தொனி

1. பூனை சீறும்.
2. நாய் குலைக்கும்.
3. ஆடு கத்தும்.
4. பசு கதறும்.
5. எருது தொனுப் போடும்.

6. குதிரை கனைக்கும்.
7. கழுதை கத்தும்.
8. பன்றி உறுமும்.
9. நரி ஊளையிடும்.
10. சிங்கம் கர்ச்சிக்கும்.
11. யானை பிளிறும்.
12. காக்கை கரையும்.
13. ஆந்தை கிளை கூட்டும்.
14. சேவல் கூவும்.
15. தேனீ பாடும்.
16. ஈ இரையும்.
17. பாம்பு சீறும்.
18. குயில் கூவும்.
19. அடைக்கலான் குருவி கீச்சிடும்.
20. மனிதன் பேசுவான்.

---

26. செல்வம் நிலையாது


1. குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்துஓரூர் நண்ணினும்நண் ணுவர்.
2. சிறப்பும் செல்வமும்பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
3. குன்றத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

4. எழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்குக் கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்.

5. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ் பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

---

27. ஓநாயும் கொக்கும்



1. ஒரு ஓநாய் பசியால் வருந்தி அலைந்து கொண்டு இருக்கும்போது ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டது. உடனே அது அதன்மேல் பாய்ந்து விழுந்து அடித்துத் தின்றது.

2. ஆட்டுக்குட்டியின் மாமிசத்தை ஆத்திரமாகத் தின்னும்போது எலும்பு ஒன்று ஓநாயின் தொண்டையில் மாட்டிக்கொண்டது. ஓநாய் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் வெகு அவஸ்தைப்பட்டது. அந்த எலும்பை எடுத்துவிட ஆனமட்டும் பிரயாசப்பட்டது. முடியவில்லை.

3. பின்பு ஓநாய் ஊளையிட்டுக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. வழியில்

எதிர்ப்பட்ட மிருகங்களையும் பட்சிகளையும் பார்த்து அந்த எலும்பை எடுத்துவிடும்படி வேண்டிக் கொண்டது. அவை அதற்கு உடன்பட வில்லை.

4. கடைசியில் கொக்கு ஒன்று அவ்வழியாக வந்தது. ஓநாய் கொக்கைப் பார்த்து 'என்னுடைய தொண்டையில் மாட்டிக்கொண்டு இருக்கிற எலும்பை எடுத்துவிட்டால் உனக்கு நல்ல வெகுமதி கொடுப்பேன்' என்றது. கொக்கு எலும்பை எடுக்க உடன்பட்டது.

5. உடனே ஓநாய் நிலத்தில் உட்கார்ந்து கொண்டு வாயைத் திறந்தது. கொக்கு தன் நீண்ட அலகை வாய்க்குள் விட்டு, நோகாமல் அந்த எலும்பை மெதுவாக எடுத்துவிட்டது. ஓநாயின் வாதையும் தீர்ந்தது.

6. பிறகு கொக்கு ஓநாயைப் பார்த்து 'நீ கேட்டுக்கொண்ட பிரகாரம் எலும்பை எடுத்து விட்டேன். எனக்குக் கொடுக்க ஒப்புக்கொண்ட வெகுமதியைக் கொடு; நான் போகவேண்டும்' என்றது.

7. அதற்கு ஓநாய் 'அடே! மூடா! உன்னைப் போல மூடனை நான் எங்கும் பார்த்ததில்லை. நீ உன் தலையை என் வாய்க்குள் விட்டபோது நான் அதைக் கடித்து மென்று தின்னுமல் விட்டதே ஒரு பெரிய வெகுமதி. நன்றியில்லாமல் பின்னும் என்ன வெகுமதி கேட்கிறாயே' என்று கோபித்தது.

8. கொக்கு ஒன்றும் பேசாமல் வெட்கித் தன் வழியே போய்விட்டது. ஓநாயும் தான் சுக மடைந்ததை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டு தான் வசிக்கும் இடத்துக்குப் போயிற்று.

நன்றியில்லாதவர்களுக்கு உபகாரம் செய்தல் கெடுதி

---

28. குழந்தைகளைத் தாலாட்டுதல்

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ

1. முத்தே பவளமே
முக்கனியே ரத்தினமே
கொத்து மருக்கொழுந்தே
கோமளமே கண் வளராய்— ஆரா.

2. தித்திக்கும் பாலே
தெவிட்டாத தெள்ளமுதே
சித்தத்தி னுட்களிக்கும்
செங்கரும்பே கண் வளராய்— ஆரா.

3. ஆணிப் பசும் பொன்னே
ஆராத தெள்ளமுதே
மாணிக்கமே எங்கள்
வாழ்வே நீ கண் வளராய்— ஆரா.

4. அத்தை அடித்தாளோ
அம்மான் அடித்தானே
முத்துக் கண்ணீர் நிறுத்தி
மோகனமே கண் வளராய்— ஆரா.

5. பாட்டி அடித்தாளோ
பால்வார்க்கும் கையாலே
வாட்டம் ஒழிந்து நீ
மைந்தனே கண் வளராய்— ஆரா.

6. மாமி அடித்தாளோ
மல்லிகைப் பூச் செண்டாலே
சாமி புலம்பாதே
சண்பகமே கண் வளராய்— ஆரா.

7. அத்தை மடிமேலும்
அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும்
மரகதமே கண் வளராய்— ஆரா.

29. சோம்பேறிப் பையன்

1. காக்கை யேநீ எங்கே போறாய்
கடுக விளை யாட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் ஒரு கூடு கட்ட வேண்டும்

2. நாயே நாயே எங்கே போறாய்
நாடி என்னுடன் ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய் வீடு காக்க வேண்டும்

3. எறும்பே எறும்பே எங்கே போறாய்
என்னுட னேநீ ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய் வீடு கட்ட வேண்டும்

4. தேனீ தேனீ எங்கே போறாய்
தேர்ந்து என்னுடன் ஆட வாராய்
நான் வரவே மாட்டேன் அப்பா
நான் போய்த் தேனைச் சேர்க்க வேண்டும்

5. ஐயோ எனக்குப் புத்தி வந்தது
ஆரும் ஆட மாட்டேன் என்றார்
நானும் இதோ வீடு சென்று
நன்றாய் வேலை செய்து வருவேன்

6. என்று ஓடிப் போனான் பையன்
இன்பாய்ப் பாடம் படித்தொப் பித்தான்
பரிசுகள் பெற்றுத் தேர்ச்சி அடைந்தான்
பாங்காய்ச் சிறுவன் கீர்த்தி பெற்றான்.

---

30. கழுதையும் நாயும்

1. ஒரு வண்ணான் தன் துணிகளைச் சுமப்ப தற்காக ஒரு கழுதையையும் வீட்டுக்குக் காவலாக ஒரு நாயையும் வைத்து வளர்த்து வந்தான். அவை இரண்டும் வண்ணான் வீட்டில் மிகவும் ஐக்கியமாக வாழ்ந்துகொண்டிருந்தன.

2. வண்ணான் கழுதைமேல் பளுவான துணி மூட்டைகளை ஏற்றி அதைத் துறைக்கு ஓட்டிக் கொண்டு போவான். விரைவாய்ப் போகாவிட் டால் சில சமயங்களில் அவன் கழுதையை அடிப்பதும் உண்டு. வேலை செய்வது கழு தைக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.



3. இப்படி வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்த பின்னும் வண்ணன் கழுதைக்குச் சரியாகத் தீனி போடுகிறதில்லை. குடிசைக்குப் பின்னே அதைக் கட்டிக் கொஞ்சம் புல்லுப் போடுவான்.

4. நாய்க்கோ வேலை ஒன்றும் கிடையாது. சாப்பிடுவதும் தூங்குவதும்தான் அதின் வேலை.

வண்ணனே நாய்மேல் அதிக பிரியம்! கழுதை யோடு கடுகடுப்பாய்ப் பேசுவான்.

5. இதைக் கவனித்த கழுதை நாயைப் பார்த்து 'நான் அதிக வேலை செய்தும் வண்ணன் என்னைக் குரூரமாய் நடத்துகிறான். நீ ஒரு வேலையும் செய்யாதிருக்க உன்மேல் அவன் பிரியமாய் இருக்கிறான்; இதற்குக் காரணம் என்ன?' என்றது. நாய் சும்மா இருந்துவிட்டது.

6. பிறகு ஒருநாள் திருடர் வண்ணன் வீட்டில் புகுந்தார்கள். நாய் குலைத்தது. உடனே வண்ணன் விழித்துக்கொண்டு திருடரை ஓட்டிவிட்டு நாயைத் தூக்கி மடிமேல் வைத்து முத்தியிட்டான்.

7. இதைப் பார்த்துக்கொண்டிருந்த கழுதை 'ஓகோ! நாய் இரவில் குலைக்கிறதினால் அல்லவா வண்ணன் நாயின்மேல் பிரியமாய் இருக்கிறான்; இனிமேல் நானும் அப்படிச் செய்யவேண்டும்' என்று சொல்லிக்கொண்டது.

8. பொழுது போனதும் வண்ணன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டான். அவனும் அவன் மனைவி மக்களும் நன்றாய்த் தூங்கினபின் கழுதை கத்த ஆரம்பித்தது. வண்ணன் 'சீ! கழுதை சும்மாயிரு' என்றான். கழுதை பின்னும் கத்திற்று. உடனே அவன் உலக்கைத் தடியை எடுத்துக் கழுதையின் இடுப்பு ஒடியும்படி அடித்தான்.


9. மறுநாள் கழுதை உடம்பெல்லாம் காயப்பட்டு மிகவும் வருத்தத்தோடு குரூவிக்கொண்டு

நின்றது. நாய் அதைப் பார்த்து, 'சிநேகிதா, உனக்காக நான் விசனப்படுகிறேன். ஒவ்வொருவரும் தத்தமக்குரிய வேலையே செய்யவேண்டும்; இல்லாவிட்டால் கெடுதி வரும்' என்றது.

அடாது செய்தவர் படாது படுவர்.

---

31. குரங்கும் எலிப்பொறியும்



1. ஒரு குடியானவனுடைய தோட்டத்திலுள்ள வாழைப் பழங்களை எலிகள் வந்து நாசம் செய்துகொண்டிருந்தன. குடியானவன் அவைகள் வராதிருப்பதற்காகப் பலவித உபாயங்கள் செய்தான். ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாக அவைகளைக் கொன்றுவிடுவதே நலமென்று தீர்மானித்தான்.

2. இப்படி எண்ணிக்கொண்டு தன் பக்கத்து வீட்டுக்காரனை யோசனை கேட்டான். அவன், 'எலிப்பொறி ஏற்றிவைத்தால் எலிகளைச் சுலபமாகக் கொன்றுவிடலாம்' என்றான். குடியான

வனும் அப்படியே இரும்பினால் செய்த பொறி யொன்றை ஏற்றி வேலியோரமாக வைத்தான்.

3. தோட்டத்திலுள்ள மரத்திலிருந்த குரங் கொன்று குடியானவன் பொறி ஏற்றிவைப்ப தைக் கூர்மையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது. அவன் செய்ததெல்லாம் அதற்கு வேடிக்கை யாய் இருந்தது.

4. குடியானவன் போனவுடன் அது மெது வாக இறங்கி வந்து எலிப்பொறியின் பக்கத்தில் உட்கார்ந்தது. பொறியைப் பார்க்கப் பார்க்கக் குரங்குக்கு ஆச்சரியம் அதிகமாயிற்று.

5. உடனே அது தன் கையால் அப்பொறி யைத் தடவிப் பார்த்தது. பார்க்கவே அது பொறியில் அகப்பட்டுக் கொண்டது. குரங்கு உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் மிகவும் கூச்ச லிட்டது.

6. கூச்சலைக் கேட்டுக் குடியானவன் ஓடி வந்தான். குரங்கின் பரிதாபமான நிலைமையைக் கண்டு மனதுருகி அதை விடுவித்துவிட்டான். குரங்கு தப்பினதே போதுமென்று ஓட்டம் பிடித்தது.

நமக்கு அடாத காரியத்தில் நாம்
பிரவேசித்தல் ஆகாது.

32. கிளிப் பாடல்



1. அரச மரத்துக்கிளி
ஆசாரம் பேசுங்கிளி
பாலன்வடி வேலன்கிளி
பாடுதுபார் ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே !
வாருங்களே.

2. புன்னை மரத்துக்கிளி
புதுமைமெத்தப் பேசுங்கிளி
மன்னன் வளர்த்தகிளி
மாண்பாகப் பாடுதுபார்
எல்லோரும் பாருங்களே !
வாருங்களே.

3. பாக்கு மரத்துக்கிளி
பதங்கள்மெத்தப் பாடுங்கிளி
வாக்கிற் சிறந்தகிளி
மகிழ்வாக ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே !
வாருங்களே.

4. பூங்கா வனத்துக்கிளி
புலவரைப்போல்பேசுங்கிளி
பாங்காய் வளர்த்தகிளி
பாடுதுபார் ஆடுதுபார்
எல்லோரும் பாருங்களே !
வாருங்களே.

33. சிறுவனும் வேங்கைப்புலியும்



1. வடக்கே கங்கை ஆற்றங்கரையில் பெரிய காடுகள் உண்டு. அக்காடுகளில் அநேக புலிகள் வசிக்கின்றன. ஆற்றின் இருகரையிலும் வசிக்கும் ஜனங்கள் படகுகளில் ஏறிப் போய்க் காடுகளில் விறகு வெட்டுவதும், தேன், மெழுகு முதலிய வஸ்துக்களைச் சேகரித்துக்கொண்டு வருவதும் வழக்கம்.

2. ஒருநாள் இரண்டு மனிதர் ஒரு பையனோடு கூடப் படகில் ஏறிக் காட்டுக்குப் போனார்கள். அங்கே போனவுடன் அவர்கள் பையனைப் படகுக்குக் காவலாக வைத்துவிட்டுக் காட்டுக்குள் நுழைந்தார்கள்.

3. பையன் படகிலே தனிமையாய் உட்கார்ந்துகொண்டு இருந்தான். அப்பொழுது காட்டிலிருந்து பெரிய புலியொன்று வந்தது. பையன் பயந்து நடுங்கினான். ஆனாலும் அவன் தைரிய

மாகப் படகின் அடித்தட்டில் போய் ஒளித்துக் கொண்டான்.

4. புலி அதிக கோபத்தோடு படகில் பாய்ந்தது. அது பாய்ந்த வேகத்திலல் அதின் கால் ஒன்று தட்டிலிருந்த துவாரத்தில் மாட்டிக் கொண்டது.

5. தட்டின் கீழே பதுங்கிக்கொண்டிருந்த பையன் பலமான ஒரு கயிற்றால் புலியின் காலைப் படகோடு கட்டிவிட்டான். புலி காலை எவ்வளவாக இழுத்தாலும் அது வரவில்லை.

6. இப்படியிருக்க காட்டுக்குப்போன மனிதர் திரும்பி வந்தார்கள். புலி படகின் தட்டின்மேல் படுத்திருப்பதையும் பையன் இல்லாதிருப்பதையும் கண்டு திகைத்தார்கள். ஓகோ! பையனைப் புலி அடித்துக் கொன்று தின்றுவிட்டது என்று எண்ணி வருத்தப்பட்டார்கள்.

7. புலி அவர்களைக் கண்டவுடன் எழுந்துஓட எத்தனித்தது; ஆனால் அதின் கால் பலமாய்க் கட்டப்பட்டிருந்தபடியால் ஓட முடியவில்லை. உடனே அவர்கள் சங்கதி தெரிந்துகொண்டு புலியைத் தடியால் அடித்துக் கொன்றார்கள். பையன் தட்டின் கீழே இருந்து ஒரு அபாயமுமில்லாமல் வெளியே வந்தான்.

புத்திமான் பலவான்.

---

34. மங்களம்

1. மங்களமே, சுப மங்களமே
மன்னன் ஜார்ச்சுக்கு மங்களமே.

2. எங்கள் ராணிக்கு மங்களமே
இன்பமாய் வாழ்த்திட மங்களமே.

3. ராச குமாரர்க்கு மங்களமே
தேசம் செழித்திட மங்களமே.

4. அரச குமாரிக்கு மங்களமே
அன்பாய் வாழ்த்திட மங்களமே.

5. ஆங்கில அரசுக்கு மங்களமே
ஆண்டு நடத்திடும் மங்களமே.

6. மங்களமே, சுப மங்களமே
மானிலம் ஓங்கிட மங்களமே.

17111

S. P. C. K. PRESS, MADRAS—1921

புதிதாய் வெளியிட்டிருக்கும்

வித்தியா மாலிகை என்னும்

STANDARD TAMIL READERS

கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் (C. L. S.) இப்பொழுது அச்சிட்டு வெளியிட்டிருக்கும் 'வித்தியா மாலிகை' என்னும் சிறு தமிழ் வாசக புத்தகங்கள் பள்ளிக்கூட முகாமைக்காரர் ஆசிரியர் என்னும் இருதிறத்தவரானும் விசேஷமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. இத்தொடர்ப் புத்தகங்கள் அரிதும் புதிதுமான அநேக விஷயங்களைத் தம்முள் அடக்கியிருப்பதுமன்றி, பள்ளிக்கூடங்களின் பற்பல வகுப்புகளுக்கேற்கச் சிறந்த தென்விய நடையில் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகட்குப் பொருந்துமாறு எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அநேக அழகான படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு புத்தகத்தின் முகப்பிலும் வர்ணக் சீட்டிய முகப்புப் படமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவை இவ்விரசதானியில் மாத்திர மல்ல, தமிழ் வழங்கும் எந்நாட்டிலும் பயன்படவேண்டுமென்பதே நமது கோரிக்கை.

வித்தியா மாலிகை

	அ. பை.		அ. பை.
பாலபாடம்	1 6	மூன்றும் புத்தகம் ...	3 0
முதற் புத்தகம் ...	3 0	நான்காம் புத்தகம் ...	4 0
இரண்டாம் புத்தகம்...	3 6	ஐந்தாம் புத்தகம் ...	7 0

பள்ளிக்கூட தமிழ்ப் புத்தகங்கள்

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகளுக்குப் பொருந்தியிருக்கின்றனவென்று வித்தியா தலைவர் (Director of Public Instruction) என்னும் அதிகாரி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

	அ. பை.
முதற் பாடம்	1 6
முதலாம் வாசக புத்தகம்	3 0
இரண்டாம் வாசக புத்தகம்	3 0
மூன்றும் வாசக புத்தகம்	4 0
நான்காம் வாசக புத்தகம்	3 6
ஐந்தாம் வாசக புத்தகம்	5 0
ஆறும் வாசக புத்தகம்	4 6
ஏழாம் வாசக புத்தகம்	5 6
எட்டாம் வாசக புத்தகம்	6 0
ஒன்பதாம் வாசக புத்தகம்	8 0
முதற் புத்தகம் ... (S. G. Daniel)	3 0
இரண்டாம் புத்தகம் ... (,,)	4 0
மூன்றும் புத்தகம் ... (,,)	5 0
நான்காம் புத்தகம் ... (,,)	6 0
ஐந்தாம் புத்தகம் ... (,,)	7 0
பாலர் பாட அனுபந்தம் ... (,,)	1 0
பாலர் பாடப் போதகன். (The Tamil Alphabet Teacher) தகரப்பெட்டியுடன்	ரூ. அ. பை. 3 12 0